[1982 செப்டம்பர் 7

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, சாயில் எரோஷனைத் தடுப்பதற்காகக் கடன் வழங்கும் நேரத்தில் ஒரு நபருக்கு 5,000 ரூபாய் என்ற முறையில் வழங்குவதாகவும், அதனால் பல ஏக்கரா நிலங்களில் ஏற்படும் மண் அரிப்பைத் தடுக்க முடியவில்லை என்றும் கூறப்படுகிறது. ஆகவே ஒரு நபருக்கு இவ்வளவு ரூபாய் என்று கொடுப்பதற்குப் பதிலாக ஏக்கராக்களின் அடிப்படையில் அந்தக் கடனைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, கடன் ரொக்கமாக வழங்கப்படுவதில்லை என்பதைத்தான் ஏற்கனவே குறிப்பிட்டேன். ஆகின்ற செலவினைத்தான் கடனாகக் கருதி பத்தாண்டு தவணைகளிலே வசூலித்துக் கொண்டிருக்கிறோம்.

சென்னையில் போடப்பட்டுள்ள சோடியம் ஆவி விளக்குகள்

*வினா எண் 10—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் புதிதாகப் போடப்பட்டிருக்கும் சோடியம் ஆவி விளக்குகள் பலவற்றில் நிறைந்த ஒளியில்லாதிருப்பதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: சோடியம் ஆவி விளக்குகளில் ஒளித்திறன் மின் அழுத்த வேறுபாடுகளினால் மிகையாகவே பாதிக்கப்படுகின்றது. காலப்போக்கினாலும் ஒளித்திறன் குறைகிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது பலயிடங்களிலே இந்த சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இந்த விளக்குகள் பொருத்துவதற்கு ஒரு விளக்குக்கு – அந்த பல்புக்கு ஆகும் செலவு எவ்வளவு? அது கெட்டுவிட்டால் அந்த நகராட்சிகளோ அல்லது நகரப் பஞ்சாயத்துக்களோ திரும்ப வாங்குவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்களே, ஆகவே, அதற்குப் பதிலாக வேறு விளக்குகளை – கொஞ்சம மலிவான விலை உள்ள விளக்குகளைப் போட்டுக் கொள்வதற்கு அரசு அந்த நகராட்சிகளுக்குச் சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1982 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, சோடியம் ஆவி விளக்குகளைப் பொறுத்தவரையில் மெர்க்குரி விளக்குகளைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிக மணி நேரம் விளக்கின் மின் திறன் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது ஒளி கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. அதே நேரத்தில் இந்த சோடியம் ஆவி விளக்குகளைப் போடுவதால்—குறிப்பாக டிராஃபிக் கன்ஜஷன் இருக்கும் இடங்களில் இவைகளைப் போட்டுக் கொண்டிருக்கிறோம்— இரவு நேரங்களில் குறிப்பாக மழை பெய்யும் காலங்களில் கண்ணுக்குப் புலனாகும் வகையில் அங்கேயுள்ள சாலைகள் மிகத் தெளிவாகத் தெரியும் வரையில் இந்த சோடியம் ஆவி விளக்குகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஒரு விளக்கு ஏறக்குறைய 4,500 ரூபாய் அல்லது 5,000 ரூபாய் ஆகிறது. குறிப்பாக 15,000 மணிகள் நேரம் எரியக் கூடிய விளக்குகளாக இந்த விளக்குகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, நல்ல தன்மை உள்ள விளக்குகளைப் போட்டால் அதிக நேரம் நீடித்த உழைப்பு கிடைக்கும்; மார்ட்டாலிட்டி ரேட் குறைவாகவும் இருக்கக் கூடியதாக இருக்கிறது.

மதுரை நகரில் அழுகும் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களிடம் வசூலிக்கப்படும் கட்டணம்

* வினா எண். *11*—திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சி அழுகும் பொருட்களான (Perishable commodites) கறிகாய் மற்றும் வாழை இலை போன்ற பொருள்களை மதுரை நகருக்குள் கொண்டு செல்கின்ற மதுரையிலிருந்து எடுத்துச் செல்கின்ற வாகனங்களுக்கு அதில் உள்ள சரக்குகளுக்கான தனி கட்டணம் வசூலிக்க ஏலம் விடப்பட்டிருப்பதை அரசு அறியுமா?

ஆம் எனில், இதை உடனடியாக ரத்து செய்ய ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ.) மற்றும் (ஆ). வாகனங்களில் வரும் சரக்குகளுக்கான தனிக் கட்டணம் வசூலிக்க ஏலம் விடப்படவில்லை. மதுரை வடக்காவணி மூலவீதியில் உள்ள பசும்பொன் நாளங்காடிக்கு நாள்தோறும் காய்கறிகள் கொண்டு வரும் வாகனங்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் — வகையில் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை மதுரை–மாநகராட்சி மன்றத்தின் 24-7-81 தேதிய தீர்மானம் எண். 297–ன்படி ஏலம் விடப்பட்டது. ஆனால், மதுரை மாநகராட்சி மன்றத்தின் 29–10–81 தேதிய 499–வது எண் தீர்மானத்தின்படி, ஷ ஏலம் ரத்து செய்யப்பட்டுள்ளது.